தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 5/- மலர் 12 இதழ் 08 டிசம்பர் 2010 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அன்னை தெரசா மகளிர் வளாகம் திறப்பு விழா

மணி நேரத்திற்கும் மேல் சுழல் நிதி வழங்கியதில்

சதம் அடித்த மாண்புமிகு துணை முதல்வர்

“ பல்வேறு நலப்பணிகளை மகளிருக்கு அளிப்பதன் மூலம் மகளிர் வாழ்வு வளம் பெற தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகம் அயராது செயலாற்றி வருகிறது. ”

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

மகளிர் நலன் மாண்புறவும், அவர்கள் தம் சொந்தக் காலில் நின்று, பொருளாதார சுய சார்பு பெறவும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் பல்வேறு செயல்களில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

நகர்ப்புறங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் உள்ள பெண்களின் வறுமையை நீக்க பெண்களுக்கு அனைத்து மட்டங்களிலும் அதிகாரத்தை அளித்தல், புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்தல், தொழிற்பயிற்சிகள் அளித்தல், மானியத்துடன் கூடிய சுழல் நிதியினை வழங்குதல், வங்கிக் கடன் பெற்றுத் தருதல், கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், ஊக்க நிதி வழங்குதல், பெருங்கடன் பெற்றுத் தருதல் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்திட உதவுதல், மாநில மற்றும் மாவட்ட அளவில் விற்பனைக் கண்காட்சிகள், மணிமேகலை விருதுகள், வங்கியாளருக்கு விருதுகள், இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சிகள், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெற்றுத் தருதல், சுய தொழில் தொடங்க மானியக் கடன், குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்திட கலாச்சாரப் போட்டிகள் என பல்வேறு நலப்பணிகளை மகளிருக்கு அளிப்பதன் மூலம் மகளிர் வாழ்வு வளம் பெற தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகம் அயராது செயலாற்றி வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் அமைக்கப்பட்டுள்ள ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினைப் பொருட்கள் கையேடும் வெளியிடப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன், தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் தம் வாழ்வு மேலும் மேலும் சிறப்படைய, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம் என்றும் அயராது செயலாற்றி வரும் என்றும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேலும் சிறப்பாக செயலாற்றி, சாதனைகள் பல படைக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்!

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

அறிவொளி துளசி மகளிர் சுய உதவிக் குழு 5

கடந்த 2004ம் ஆண்டு முதல் அறிவொளி துளசி மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

சதம் அடித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் 13

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சுழல் நிதி வழங்கிக் கொண்டிருந்த போது, 100 மணி நேரம் ஆனதும், சுழல் நிதியை நேரடியாக தன் கையால் வழங்கியதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சதமடித்து விட்டார் என அறிவிப்பு செய்யப்பட்டது.

வெற்றியை நோக்கி ஒரு பயணம் 16

22

குடல் புண் நோய்

வலி இருக்கும் காலத்தில் மார்பு எலும்புக் கூட்டுக்கு பின்னால் எரிவது போன்ற உணர்ச்சியும் உடன் ஏற்படும். இதையே நெஞ் செரிச்சல் என்கிறோம்.

24

வளர்க வணிகம்

26

இணைவோம், உழைப்போம், வளர்வோம்
முனைவோம், முயல்வோம், உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 08 டிசம்பர் 2010 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

சிறுவர் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

அநீதி என்ற அரக்கனை அழித்து, விழிப்புணர்வு என்ற ஒளியை ஏற்றுவதற்கு அடையாளமாக கொண்டாடப்படும் தீபத் திருநாளாம் தீபாவளியை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள். அதே வேளையில், பெண்களுக்கு குறிப்பாக சுய உதவிக் குழுக்களிலுள்ள பெண்களுக்கு மற்றொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியும் தமிழகத்தில் நடந்தேறியுள்ளது. தமிழகத் தலைநகராம் சென்னை மாநகரில் மகளிருக்கென்று மகளிர் வளாகம் எனும் பெண்களுக்கான புதிய மையம் தமிழக அரசால் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. பெண்களை பெருமைப்படுத்தும் வகையில் அந்த வளாகத்திற்கு அன்னை தெரசாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஏழை எளியவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, சேவை புரிந்து அதற்காக உலகிலேயே மிகச் சிறந்த பரிசான நோபல் பரிசை பெற்ற மதிப்புமிக்க பெண்மணி அன்னை தெரசாவின் பெயரில் அன்னை தெரசா மகளிர் வளாகம் எனப் பெயரிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

அன்னை தெரசா மகளிர் வளாகம், தமிழகத்தில் உள்ள பல லட்சம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வளர்ச்சிக்கான அலுவலகமாகவும், ஆலோசனை மையமாகவும், தகவல் மையமாகவும், வழிகாட்டும் மையமாகவும், நிரந்தர விற்பனை மற்றும் கண்காட்சி மையமாகவும் செயல்படவுள்ளது என்பது ஒரு இனிமையான செய்தியாகும். இதற்கு மூலகாரணமாக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மகளிர் குழுக்களின் சார்பாக முற்றம் இதழ் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் குழந்தைகள் தின விழா கொண்டாடி வருகின்றோம். குழந்தைகளின் வளர்ச்சியில் முழு பங்கேற்கும் அமைப்புகளாகிய குடும்பம், கல்விக் கூடம் மற்றும் சமுதாய ஆகிய மூன்றும் குழந்தைகளுக்கு முன்மாதிரிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

நல்ல பண்புகளுடன் கூடிய அறிவைக் கொடுக்க வேண்டும். நல்ல ஒழுக்கத்தோடு கூடிய சமூக பொறுப்புகளை வளர்க்க வேண்டும். இந்த மூன்று இடங்களிலும் குழந்தைகளுக்கு கிடைக்கும் தவறான முன் மாதிரிகள்தான் குழந்தைகளை எதிர்காலத்தில் குற்றவாளிகளாகவும், தீவிரவாதிகளாகவும், சமூக விரோதிகளாகவும் மாற்றி விடுகிறது.

குழந்தைகளை நன்னெறியோடு வளர்ப்பதற்கு மக்கள் தொடர்பு சாதனங்களான திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் ஆகியவை பெருமளவில் உதவி புரிய வேண்டியுள்ளது. காரணம் இன்றைய இளைஞர்களின் பெரும்பாலான செயல்பாடுகள் திரைப்படங்களின் தாக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்த குழந்தைகளின் வளர்ச்சிக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உதவி செய்ய முன் வர வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சிக்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சி.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

வழிகாட்டுகிறது!

முற்றம் இதழில் சிறுவர் முதல் முதியோர் வரை பல தரப்பினரும் பயன்படும் வகையில் வழிகாட்டும் வாழ்வியல் தகவல்கள் யாவும் வெளியாவது மிகவும் பாராட்டுக்குரியது. குறிப்பாக அரசு அளித்து வரும் நலத் திட்ட உதவிகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாடுகள், கிராம கற்றல் மையம் போன்ற மிகவும் பயனுள்ள தகவல்களின் மூலம் முற்றம் இதழ் எங்களுக்கு வழிகாட்டி வருகிறது.

திரு. இரா. வேங்கடம்,
ஒருங்கிணைப்பாளர்,
உந்துனர் அறக்கட்டளை,
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

நன்றி! நன்றி!!

முற்றம் இதழில் 'வளர்க வணிகம்' என்ற பகுதியில் எங்கள் குழு உற்பத்தி செய்யும் ஐம்பொன் நகைகள் குறித்த விபரம் இடம் பெற்றிருந்தது. இந்தப் பகுதி யினைப் பார்த்து பல ஊர்களில் இருந்தும் எங்கள் குழுவின் உற்பத்திப் பொருளை வாங்குவதற்கு தொலைபேசி வாயிலாக ஏராளமான விற்பனை வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன.

குங்குமம் மகளிர் சுய உதவிக் குழு,
13, பூமாலை வணிக வளாகம்,
டவுன் ஹால், கோவை மாவட்டம்.



www.tamilnaduwomen.org/murtram

வாழ்த்துகிறோம்!

முற்றம் இதழில் வெளிவரும் செய்திகள் எங்களைப் போன்ற சுய உதவிக் குழுக்களின் மகளிருக்கு பல்வேறு விதங்களிலும் உதவிகரமாக இருக்கிறது. இடம் பெற்றுள்ள கட்டுரைகளும், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளும், உடல் நலக் குறிப்புகளும், வரலாற்றில் மகளிர் போன்ற செய்திகளும் எங்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதாக உள்ளது.

செல்வி. புவனா,
தங்கம் மகளிர் சுய உதவிக் குழு,
வெளிக்காடு, மதுராந்தகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்

ஊக்கமளிக்கிறது!

செப்டம்பர் மாத முற்றம் இதழில் எங்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிப்பு நிலையம் குறித்து செய்தி வெளியிட்டுள்ளது எங்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது. முற்றம் இதழிற்கு எங்கள் குழுவின் சார்பில் நன்றி.

காமாட்சி மகளிர் சுய உதவிக் குழு,
செலந்தம்பள்ளி கிராமம்,
திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

"மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி."

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com ■ wdcmutram@gmail.com

செங்கல் சூளை அமைத்து

செங்கல் உற்பத்தி செய்யும் மகளிர் குழு

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளபாளையம் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ பகவதி மகளிர் சுய உதவிக் குழுவினர் செங்கல் தயாரிக்கும் தொழில் செய்து வருகின்றனர். 2001ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்குழு 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2005ஆம் ஆண்டில் சுழல் நிதியாக 25 ஆயிரம் ரூபாய் மற்றும் இதே ஊரைச் சேர்ந்த சரஸ்வதி மகளிர் சுய உதவிக் குழுவினர் 25 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் பெற்று 75 செண்ட் நிலம் வாங்கினார்கள். இந்த இரு குழுக்களையும் சேர்ந்த 25 நபர்களும் தலா 3 செண்ட் வீதம் தனித்தனியாக நிலத்தை கிரயம் செய்து கொண்டனர். அந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு 1 செண்ட் 5 ஆயிரம் ரூபாய் ஆகும்.

2009–2010ஆம் ஆண்டு பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் பொருளாதாரக் கடனாகப் பெற்ற 4 இலட்ச ரூபாயினைக் கொண்டு செங்கல் சூளை அமைத்து செங்கல் தயாரிக்கும் தொழிலைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். ஒரு செங்கல் சூளைக்கு 50 ஆயிரம் கற்கள் தயார் செய்யலாம். ஒரு சூளைக்கு 30 நாட்கள் ஆகும். மண் குழைக்கும் பணிக்கு மட்டும் 4 ஆண்களை வேலைக்கு வைத்துள்ளனர். மற்ற வேலைகள் அனைத்தையும் குழுவின் உறுப்பினர்களே செய்து வருகின்றனர்.

மேலும் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனிப்பட்ட முறையில் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். மகளிர் திட்டம் இவர்களுடைய வருவாயை பெருக்கியது மட்டுமல்ல ஒவ்வொரு உறுப்பினரும் 3 செண்ட் இடத்தை தங்களுக்கு சொந்தமாக வைத்துள்ளதற்கும் முக்கிய காரணமாகும் என இக்குழுவினர் பெருமையுடன் தெரிவிக்கின்றனர். மேலும் ஒவ்வொரு உறுப்பினரும் தற்போது மாதம் ரூ. 7000 வரை வருமானம் பெற்று வருகின்றனர். இதன் மூலம் தங்களின் குடும்பத் தேவைகளை பெருமளவில் தாங்களே பூர்த்தி செய்து கொள்கின்றனர். ■

ஒரு செங்கல் சூளைக்கு 50 ஆயிரம் கற்கள் தயார் செய்யலாம். ஒரு சூளைக்கு 30 நாட்கள் ஆகும். மண் குழைக்கும் பணிக்கு மட்டும் 4 ஆண்களை வேலைக்கு வைத்துள்ளனர். மற்ற வேலைகள் அனைத்தையும் குழுவின் உறுப்பினர்களே செய்து வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில்

அழகிய கைவினைப் பொருட்களின் அணிவகுப்பு

தூத்துக்குடி மாவட்டம், வைகுண்டம் ஒன்றியம், பழைய காயல் கச்சேரி தெருவில் கடந்த 2004ம் ஆண்டு முதல் அறிவொளி துளசி மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

அழகிய கலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பயிற்சியை பெற்றுள்ள இக்குழுவினர், சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவைகளைப் பெற்று, சுடுமண் பொம்மைகள் (டெரகோட்டா) மற்றும் பல்வேறு வகையான கைவினைப் பொருட்களை தரமான முறையிலும் மிகக் குறைவான விலையிலும் தயாரித்து விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மகளிர்திட்டம்மற்றும்எஸ்.ஜி.எஸ்.ஒய்.திட்டத்தின்மூலமாகமாநிலத்தின்பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வரும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். வெளி மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் இவர்கள் பங்கு கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

தங்களது குழுவில் இல்லாத பெண்களுக்கும் பல்வேறு கலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கலையைக் கற்றுக் கொடுத்து வருகின்றனர்.

மேலும் தங்கள் பகுதியின் வளர்ச்சிக்காகவும், பெண்களின் ஆரோக்கியத்திற் காகவும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துவது, ஆதரவற்றோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்வது, சுற்றுப்புறச் சூழலைக் காப்பது போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். ■

பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் கலந்து கொண்டு தாங்கள் உற்பத்தி செய்யும் கலைப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் வருவாய் ஈட்டி வருகின்றனர். மேலும் வெளி மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் கலந்து கொண்டு விற்பனை செய்து வருகின்றனர்.

மாநிலத் தலைநகரில்

அன்னை தெரசா மகளிர் வளாகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்

சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட அளவில் 29 வளாகங்கள் 22 கூடுதல் வணிக வளாகங்கள் மற்றும் 256 கிராம அங்காடிகள் கட்டப்பட்டு அவைகளில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் நிரந்தரமாக விற்பனை செய்யப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வள்ளுவர் கோட்டம் அருகில் 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னை தெரசா மகளிர் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மகளிர் திட்டத்தின் கீழ் 73.60 இலட்சம் மகளிரை உறுப்பினராகக் கொண்டு 4.79 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்கும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் தமிழக அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை அதிகப்படுத்தவும், மக்களிடையே இப்பொருட்களை பிரபலப்படுத்தவும் ஆண்டுதோறும் மாநில மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தேசிய அளவில் பல்வேறு மாநில தலைநகரங்களில் நடைபெறும் விற்பனை கண்காட்சிகளிலும் இக்குழுக்கள் பங்கேற்கின்றன.

சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட அளவில் 29 வளாகங்கள், 22 கூடுதல் வணிக வளாகங்கள் மற்றும் 256 கிராம அங்காடி வளாகங்களும் கட்டப்பட்டு இப்பொருட்கள் நிரந்தரமாக விற்பனை செய்யப்படுகின்றன.

மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட இதுவரை நிரந்தரமாக கட்டமைப்புகள் எதுவும் இல்லை. தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வள்ளுவர் கோட்டம் அருகில் 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னை தெரசா மகளிர் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தின் திறப்பு விழா 1.11.2010 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இக்கட்டடத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

முன்னதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திட, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மத்திய – மாநில அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பிரமுகர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் என ஏராளமானவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நவில விழா வெகு சிறப்பாக நிறைவுற்றது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அமைக்கப்பட்ட இந்த வளாகத்திற்கு ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ என்று பெயர் சூட்டி மகிழ்ந்ததோடு, கட்டடத்தை திறந்து வைத்து சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது சிறப்புரையில்,

> **பெண்களுக்கு** சம சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அவைகளை வென்று நிற்கும் வலிமை பொருந்திய சேனையாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ந்திருப்பது பாராட்டுக்குரியது

‘அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இத்தருணத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த வளாகத்திற்கு மகளிர் முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபட்ட அன்னை தெரசா அவர்களின் பெயரினைச் சூட்டுவதுதான் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதால் இந்த வளாகத்திற்கு ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ என்ற பெயரினைச் சூட்டும்படிக் கூறினேன்.

அட்டைப்படக் கட்டுரை

அன்னை தெரசா அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்படும்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

> ‘அன்னை தெரசா ஒருதாய்தான். அவர் இந்தியாவிலே பிறக்காத ஒரு தாயாக இருக்கலாம். வெளிநாட்டிலே பிறந்து – இந்திய மக்களுக்குப் பாடுபட்ட ஒரு தாயாக இருக்கலாம். எங்கே பிறந்தாலும் தாய் தாய்தான்.

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாபெரும் வளர்ச்சியினை அடைந்துள்ளன. பெண்களுக்கு சம சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அவைகளை வென்று நிற்கும் வலிமை பொருந்திய சேனையாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ந்திருப்பது பாராட்டுக்குரியது என்றும் பெருமிதம் பொங்கக் கூறினார்கள்.

தொடர்ந்து உரையாற்றுகையில் ‘ஆண்கள் உள்ளிட்ட ஏழை, எளியோர் சமுதாயத்திற்காக, நலிவடைந்த மக்களுக்காக அவர்களுடைய நலனை அடிப்படையாக வைத்து நாளும் தொண்டாற்றி மறைந்தும் மறையாத மாதரசு அன்னை தெரசா அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்படும்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

‘அன்னை தெரசா ஒருதாய்தான். அவர் இந்தியாவிலே பிறக்காத ஒரு தாயாக இருக்கலாம். வெளிநாட்டிலே பிறந்து – இந்திய மக்களுக்குப் பாடுபட்ட ஒரு தாயாக இருக்கலாம். எங்கே பிறந்தாலும் தாய் தாய்தான். அப்படிப்பட்ட அன்னைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுவோம். ஆற்றுகின்ற நேரத்திலே அவர் வழிநின்று நடப்போம் என்ற சூளுரையை எடுத்துக் காட்டி, ‘அன்னை தெரசா வாழ்க! அவருடைய பெயரால் இங்கே அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டத்தில் நல்ல பல காரியங்கள் விளைந்திடுக! அந்தக் காரியங்கள் விளைந்திட ஊக்கத்தோடு செயலாற்றிடுக! என்றும், இதற்குக் காரண மான அனைவரையும் பாராட்டி வாழ்த்தி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்’ என்றும் இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினைப் பொருட்கள் கையேட்டினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

மேலும் இவ்விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினைப் பொருட்கள் கையேட்டினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டதுடன், எட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனான 1 கோடியே 90 இலட்ச ரூபாயும், இரண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்ச ரூபாய் நேரடிக் கடனும் வழங்கி மகிழ்ந்தார்கள்.

இந்த விழாவிற்குத் தலைமையேற்று சிறப்பித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, 'ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் இந்த வளாகம் கட்டப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற கண்காட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்கள் 1.87 கோடி ரூபாய் அளவில் விற்பனை ஆகியுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற கண்காட்சிகள் நடத்தப்பட்டதன் மூலம் 7 கோடியே 52 இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று மாநில அளவில் இந்த வளாகம் கட்டப்பட்டுள்ளது. 2007ல் இதை அறிவித்து இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர்

எட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனான 1 கோடியே 90 இலட்ச ரூபாயும், இரண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்ச ரூபாய் நேரடிக் கடனும் வழங்கி மகிழ்ந்தார்கள்.

அவர்களிடம் தேதி கேட்டபோது, உடனே தந்ததுடன் அன்னை தெரசா அவர்களின் பெயரையும் இந்தக் கட்டிடத்திற்குச் சூட்டினார்' என்று குறிப்பிட்டார்.

முன்னிலை வகித்து உரையாற்றிய மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் தனது உரையில், '1989ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் தற்பொழுது மிகப் பெரிய வெற்றியினைப் பெற்றுள்ளது. இன்று உலகில் எங்கும் இவ்வளவு மகளிர் சுய உதவிக் குழுக்கள் இருக்க வாய்ப்பில்லை. உலகிலேயே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு பெரும் இயக்கமாக இது மாறியுள்ளது. இதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் தான். அவர்களுக்கு இதற்காக நோபல் பரிசு வழங்க வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கிறது' என்று குறிப்பிட்டார்.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட அன்னை தெரசா மகளிர் வளாகம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒரு அடித்தளமாகவும், பெரும் வியாபாரிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை மொத்தக் கொள்முதல் செய்ய வசதியாகவும் அமையும். இந்த வளாகம் மகளிர் அதிகாரம் பெறுவதற்கும் மற்றும் ஊரக வறுமை ஒழிப்பிற்கும் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி முனைப்புடன் செயல்படுத்தும் தலைமையகமாக செயல்படும். ■

வெப்பத்தின் தாக்கத்தினை தவிர்க்கும் வகையில் கட்டுமான அமைப்புகள், குறைந்த மின்சார பயன்பாடு கொண்ட மின் சாதனங்கள், துளிநீரும் வீணாகாத வகையில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு, கட்டடத்தின் எப்பகுதியிலும் மரப் பொருட்கள் பயன்படுத்தவில்லை, மொத்த நிலப்பரப்பில் 40 விழுக்காட்டிற்கும் குறைவான இடத்திலேயே கட்டுமானப் பணிகள், 60 விழுக்காட்டிற்கும் அதிகமான பகுதி திறந்தவெளி என அன்னை தெரசா மகளிர் வளாகம் பசுமைக் கட்டடமாகத் திகழ்கிறது.

அன்னை தெரசா மகளிர் வளாகம் குறித்த சில அடிப்படை விவரங்கள்

நிலத்தின் பரப்பளவு	15.12 கிரவுண்ட் (36,288 சதுர அடி)
கட்டடத்தின் மதிப்பு	ரூ. 15.32 கோடி
கட்டடத்தின் பரப்பளவு	67,302 சதுர அடி
கட்டடப் பயன்பாடு	
அடித்தளம்	வாகனங்கள் நிறுத்துமிடம்
தரைத் தளம்	மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நிரந்தர மற்றும் காலமுறை விற்பனைக் கண்காட்சி
முதல் தளம்	தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக அலுவலகம்
2வது தளம்	வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலகம்
3வது தளம்	பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம்

2900 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 15.70 கோடி ரூபாய் சுழல் நிதி

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்தல், தர மதிப்பீடு செய்தல், கூட்டமைப்புகளை மறுசீரமைத்து வலுப்படுத்துதல், பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளித்தல், மானியத்துடன் கூடிய சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன், மறுகடன் மற்றும் பெருங்கடன் போன்றவற்றை பெற்றுத் தருதல், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு கண்காட்சிகள் நடத்துதல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருதல் போன்ற ஆக்கப்பூர்வான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, பெருங்கடன், தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் போன்றவற்றை தனது கரங்களால் வழங்கி சிறப்பித்து வருகிறார்கள்.

15.11.2010 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கில் நடைபெற்ற விழாவில் சென்னை மகளிர் திட்ட செயலாக்க அலகின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் சுமார் 1700 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா 60 ஆயிரம் வீதம் மானியத்துடன் கூடிய சுழல் நிதியாக 10 கோடியே 20 இலட்ச ரூபாயும், சொர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 1100 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதியாக 5 கோடியே 50 இலட்ச ரூபாயும், 100 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய தனிநபர் கடனுதவியாக 20 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாயும், தொழிற்திறன் பயிற்சி பெற்ற 100 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, பெருங்கடன், தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் போன்றவற்றை தனது கரங்களால் வழங்கி சிறப்பித்து வருகிறார்கள்.

உடனடி புகைப்படம்

இந்த விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், 2900 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சுழல் நிதியும், 100 தனிநபர்களுக்கு மானியக் கடனும் ஆக மொத்தம் 3 ஆயிரம் பேருக்கு தனித்தனியாக காசோலை வழங்கினார். நிதியுதவி பெற்ற 3 ஆயிரம் பேரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அந்தப் புகைப்படங்கள், சுழல் நிதி பெற்ற மகளிர் அரங்கத்தை விட்டு வெளியே வரும்போது உடனடியாக வழங்கப்பட்டது. இதனால் சுழல் நிதி பெற்றவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தனர்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை உரையாற்றினார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

முன்னதாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

2900 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 15.70 கோடி ரூபாய் சுழல் நிதி, 100 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய தனிநபர் கடனுதவி, தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணை ஆகியவைகளை வழங்கி சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது உரையில், 'பெண்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டுமென பல திட்டங்களை இந்த அரசு செய்து வருகிறது. சமூக நலத்துறையின் கீழ் செயல்பட்டு வந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் 2006ஆம் ஆண்டிற்குப் பிறகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டது.

ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 10 ஆயிரம் வரை சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்தது. 2008ஆம் ஆண்டிலிருந்து தான் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 99 ஆயிரத்து 245 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 99 கோடியே 25 இலட்சம் சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் இதுவரை சுழல் நிதி வழங்கும் விழா 90 இடங்களில் நடை பெற்றுள்ளன. அவற்றில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நானே நேரில் சுழல் நிதியை வழங்கியிருக்கிறேன். டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் மேலும் 40 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படும். அத்தனை குழுக்களுக்கும் நானே சென்று எத்தனை மணி நேரம் ஆனாலும் நேரில் சுழல் நிதி வழங்க உள்ளேன்.

இதுவரை தமிழகத்தில் 1 இலட்சத்து 58 ஆயிரத்து 876 குழுக்களுக்கு சுழல் நிதியினை 99.30 மணி நேரம் நானே நேரில் நின்று வழங்கியுள்ளேன். இன்றைய தினம் இங்கு நடைபெறுகின்ற இந்த விழாவில் சுழல் நிதியை வழங்குவதை சேர்த்தால் சதம் அடித்துள்ளதாக அர்த்தம். பல மணி நேரம் நின்று மகளிர் சுய உதவிக் குழு மகளிருக்கு சுழல் நிதி வழங்குவதில் பெருமைப்படுகிறேன்' என்று குறிப்பிட்டார்.

முன்னதாக விழா நடைபெற்ற கலையரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த, சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் அரங்குகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களின் தன்மை குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. டி. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிதே முடிவுற்றது. சிறப்புமிகு இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

99 ஆயிரத்து 245 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 99 கோடியே 25 இலட்சம் சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

சதம் அடித்த மாண்புமிகு துணை முதலமைச்சர்

100 மணி நேரம்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சுழல் நிதி வழங்கிக் கொண்டிருந்த போது, 100 மணி நேரம் ஆனதும், சுழல் நிதியை நேரடியாக தன் கையால் வழங்கியதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சதமடித்து விட்டார் என அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த நேரத்தில் சுழல் நிதிக்கான காசோலையை பெற்ற பெண், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு மலர்க் கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். அதைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், வெற்றிக் கோப்பையை உயர்த்திப் பிடிப்பதைப் போல, மலர்க்கொத்தை தூக்கிக் காண்பித்து மகிழ்ச்சி தெரிவித்தார். அப்போது அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று, பலமாக கைதட்டி வாழ்த்து தெரிவித்தனர். ■

நாகை

சான்றிதழ் வழங்குதல்

தமிழ்நாடுமகளிர்நலமேம்பாட்டுகழகத்தின்வழிகாட்டுதல்படிநாகை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் சார்பில் 2010–2011ஆம் ஆண்டிற்கான இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் 25 மகளிர்களுக்கு செவிலியர் உதவியாளர் பயிற்சி திண்டுக்கல் மீனாட்சி பாராமெடிக்கல் நிறுவனத்தில் 6 மாதம் அளிக்கப்பட்டது.

பயிற்சியினை நிறைவு செய்த நபர்களுக்கு பயிற்சிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத் தொகை ஆகியவற்றை மக்கள் குறை தீர்க்கும் நாளன்று நடைபெற்ற விழாவில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. ச. முனியநாதன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. எஸ். சூரியகலா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் பயிற்சி பெற்ற நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் 75 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ■

பயிற்சி பெற்ற நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் 75 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

திருவள்ளூர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளின் நன்றி

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 2.13 விழுக்காட்டினர் மாற்றுத் திறனாளிகள் என 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்தியாவில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளில் 75 விழுக்காட்டினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 16 இலட்சத்து 42 ஆயிரத்து 497 மாற்றுத் திறனாளிகள் வசிக்கின்றனர். இது தமிழக மக்கள் தொகையில் 2.64 விழுக்காடு ஆகும்.

தமிழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவும், அவர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள், வேலைவாய்ப்புகள், சுய தொழில் துவங்க கடன் வசதி போன்றவை வழங்கி பொருளாதார ரீதியாக அவர்கள் முன்னேற்றம் அடைந்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. திருவள்ளூர் மாவட்டம், ஈக்காடு பகுதியில் செயல்பட்டு வரும் வசந்தம் மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திடும் வகையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக தனித்துறையை உருவாக்கி, அதனை தன்னுடைய கண்காணிப்பிலேயே வைத்திருப்பதற்கும், மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளதற்கும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்காக 750 சுய உதவிக் குழுக்கள் அமைக்க ஆணையிட்டுள்ளதற்கும் வசந்தம் மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. ■

திருநெல்வேலி

ஊராட்சிகளுக்கான கருத்தரங்கம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் சார்பில் திருநெல்வேலி மாவட்டத்தில் மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான ஒருநாள் கருத்தரங்கம் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் திரு. எம். ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு. சங்கர், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. க. முத்து மீனாள், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல மேலாளர், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், ரூசெட்டி இயக்குனர், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர், மக்கள் தொடர்பு அலுவலர், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மேலாளர் மற்றும் 13 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 129 மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி கூட்டமைப்புகளிலிருந்து 422 நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை குறுங்கடன் நிறுவனங்களாகச் செயல்படுதல், பெருங்கடன் விதிமுறைகள், கடன் இணைப்பு, கடன் திரும்பச் செலுத்துதல், நிதி மேலாண்மை பயிற்சி, ஆளுமை பயிற்சி, பண்ணை வேலைகளில் ஊராட்சி கூட்டமைப்புகளின் பங்கு, சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய உத்திகள் அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் ஆகியவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. ■

சென்னை

இலவச நோட்டுப் புத்தகம் வழங்கும் விழா

சென்னையில் 4M அறக்கட்டளையின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வரும் சிவசக்தி மற்றும் சாய் சக்தி மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் இணைந்து ஆழ்வார்பேட்டையில் செயல்பட்டு வரும் சென்னை மேல்நிலைப்பள்ளி குழந்தைகள் 100 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், எழுதுபொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு 4M அறக்கட்டளையின் செயலாளர் திருமதி. மரியம் அப்துல் காதர் புஹாரி அவர்கள் தலைமைதாங்கி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார். சாய்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குனர் திருமதி. கற்பகம் வரவேற்புரை நல்கினார்கள். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. அப்துல் ரசீத் அவர்கள், 4M அறக்கட்டளை வள்ளல் சீதாக்காதி வழி தோன்றல் பி. எஸ். அப்துல் ரஹிமான் அவர்களின் பேத்திகள், இளமையில் செய்யும் சேவை மனப்பான்மையும், அவர்கள் நாட்டுக்கு செய்யும் உதவிகளையும் வியந்து பாராட்டி, அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்காக பாடுபடும் இவர்களும், இவர்கள் சார்புடைய மகளிரும் மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தினார்.

சிவசக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர் திருமதி. செல்வி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 4M அறக்கட்டளையின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பெரியதம்பி செய்திருந்தார். ■

> **நாட்டுக்கு செய்யும் உதவிகளையும் வியந்து பாராட்டி, அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்காக பாடுபடும் இவர்களும், இவர்கள் சார்புடைய மகளிரும் மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தினார்.**

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

வணக்கம். இப்பகுதியில் ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோர் அவர் செய்யும் தொழிலில் கூடுதலாக மாற்றங்கள் செய்தால் எவ்வாறு வெற்றி அடையலாம் என்பதை ஒரு உண்மை நிகழ்வின் மூலம் அறியலாம்.

இருபது வருடங்களுக்கு முன்பு ஒரு சாதாரண மனிதர் வெளியூரில் இருந்து கோவைக்கு வந்தார். வந்தவுடன் கோவையில் தொழில் தொடங்க நினைத்த அவர், ஒரு சிறிய மளிகைக் கடை வைத்தார். இதை எப்படியாவது பெரிய கடையாக வளரச் செய்ய வேண்டும் என்ற வெறி அவருக்குள் இருந்தது. அவர் வருகை தந்த கோவை புதிய ஊராக இருந்தாலும், அனைவரிடமும் நன்றாக பழகினார்.

மெதுவாக வாடிக்கையாளர்கள் அதிகரிக்கத் துவங்கினர். மளிகைக் கடையில் விற்பனை ஓரளவு அதிகரிக்கத் துவங்கியது. இருந்தாலும் அவர் திருப்தி அடையவில்லை. கடையை எவ்வாறு விரிவுபடுத்துவது என்று தீவிரமாக யோசித்தார்.

அவருக்கு ஏற்கனவே சமையல் வேலையில் ஓரளவு அனுபவம் இருந்தது. எனவே வாடிக்கையாளர்கள் வீட்டில் நடைபெறும் திருமணம், புதுமனைப் புகுவிழா போன்ற சுப காரியங்கள் நடந்தால் அங்கு உணவு சமைத்து,

> நம்மைச் சுற்றிலும் நிறைய வாய்ப்புகளை கடவுள் கொடுத்துள்ளார். அதை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நம் முன்னேற்றம் அமைகிறது.

ஆட்களை வைத்து பரிமாறத் துவங்கினார். உணவும் சுவையாகத் தயாரித்தார். இதற்கு தேவையான மளிகைப் பொருட்கள் அவர் மளிகைக் கடையிலிருந்து எடுத்துக் கொள்வார். மீதமாகும் மளிகைப் பொருட்களை அவரே வைத்துக் கொண்டு அதற்குரிய தொகையை வாடிக்கையாளர்களுக்குத் திருப்பித் தந்து விடுவார்.

இதை அவர் முறையாகவும், நேர்மையாகவும் செய்ததால் வாடிக்கையாளர்கள் மிகவும் திருப்தி அடைந்தனர். உணவு சமைத்து பரிமாற அவருக்கு பணம் கிடைத்ததோடு, அவர் மளிகைக் கடையில் உள்ள பொருட்களும் அதிகமாக விற்பனை ஆகத் துவங்கியது.

அவர் விற்பனை செய்யும் மளிகைப் பொருட்கள் மிகவும் தரமாக இருக்கும். விலையும் மற்ற கடைகளை விடக் குறைவு. எனவே இன்று நல்ல வளர்ச்சி அடைந்து 'கெங்கா ஸ்டோர்ஸ்' என்னும் பெயரில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. மேலும் அருண் உணவகம் ஒன்றையும் துவக்கி சிறப்பாக நடத்தி வருகிறார்.

அவருடைய தொழிலில் கூடுதலாக செய்த சில மாற்றங்கள் அவரை எந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. இந்த அளவு உயர்ந்த நிலைக்கு அவர் வளர்ந்தாலும், அவருடைய எளிமை அவரை விடவில்லை. ஆரம்பத்தில் எவ்வாறு வாடிக்கையாளர்களுடன் பழகினாரோ அதே நிலையில் பழகி வருகிறார். எனவே ஒரு தொழிலில் வெற்றி பெற கடின உழைப்பு, நேர்மை, நேரம் தவறாமை போன்றவைகளை நாம் தவறாமல் பின்பற்ற வேண்டும். இவை அனைத்திற்கும்மேலாகதன்னம்பிக்கையுடன்போட்டியாளர்களை எதிர்கொண்டு வெற்றி அடைய வேண்டும்.

> **உணவு சமைத்து** பரிமாற அவருக்கு பணம் கிடைத்ததோடு, அவர் மளிகைக் கடையில் உள்ள பொருட்களும் அதிகமாக விற்பனை ஆகத் துவங்கியது.

சுய உதவிக் குழுக்களின் மகளிரும் தாங்கள் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கைகளில் முழு முனைப்புடன் ஈடுபட வேண்டும். துவக்கத்தில் தோல்வி ஏற்பட்டாலும் அதைக்கண்டு துவண்டு விடக் கூடாது. 'தோல்வியே வெற்றியின் முதல் படி' என்னும் சொல்லிற்கு ஏற்ப மேலும் மேலும் முயற்சித்தால் வெற்றி தானே வந்து சேரும். தாங்கள் மேற்கொள்ளும் தொழிலில், நம்பிக்கை, நாணயம் போன்றவற்றைக் கடைபிடித்தால் நாளடைவில் நாமும் வெற்றி காணலாம். வெற்றி பெற்றவர்களின் வரலாற்றினைப் பார்த்தால் இந்த உண்மை நமக்கு புரியும். 'நம்மால் முடியும், நாம் சாதிக்கப் பிறந்தவர்கள்' என்ற எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் வெற்றி நமக்கு மிக விரைவில் கிடைக்கும் என்பதை மனதில் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுவினர் செயல்பட வேண்டும்.

(தொடரும்)

மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியினை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இ. ஜி. சுகவனம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. டி. செங்குட்டுவன், திரு. கே.ஆர்.கே. நரசிம்மன், திரு. கே. கோபிநாத், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

சுழல் நிதி

ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், புதிய கட்டிடங்களை திறந்து வைத்தல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி யினை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இவ்விழாவில் மத்திய – மாநில அமைச்சர் பெருமக்கள், பாராளு மன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மாவட்டச் செய்திகள்

திருவண்ணாமலை

மேலாண்மை இயக்குனரின் ஆய்வு

கொத்தனார் பயிற்சியினை நிறைவு செய்பவர்களுக்கு கலைஞர் வீடு வழங்கும் திட்டம் மற்றும் பிற கட்டுமானப் பணிகளில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் கணேஷ் பயிற்சி நிறுவனத்தில் ஹவுஸ் கீப்பிங் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் குறித்த பயிற்சி மேற் கொண்டுள்ள பயிற்சியாளர்களிடம் பயிற்சியின் தன்மை, வேலை வாய்ப்புகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். கீழ்நாச்சிப்பட்டு அருணை தொழிற்பயிற்சி நிறுவனத்தில் கொத்தனார் மற்றும் பொருத்துநர் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் பயிற்சிகளை பார்வையிட்டார். அடையந்தால் கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் செயல்பட்டு வரும் மக்கள் கற்றல் மையத்தில் (மகமை) ஆய்வு மேற்கொண்டு, அந்த மையம் மேலும் சிறப்பாக செயல்பட தக்க ஆலோசனைகளை வழங்கினார். தேவானம்பட்டு மகளிர் குழுக் கூட்டமைப்பு கட்டடத்தை பார்வையிட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள், அங்கு கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டடப் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார். கூட்டமைப்பின் பதிவேடுகளை ஆய்வு செய்து விபரங்களைக் கேட்டறிந்தார். ■

புதிய குழுக்கள் அமைத்தல், கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல், சுழல் நிதி, வங்கிக் கடன், தொழிற்திறன் பயிற்சி, மணிமேகலை விருது, விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் கலாச்சாரப் போட்டிகள் போன்றவை குறித்து மாவட்ட மகளிர் திட்ட அலுவலருடன் கலந்துரையாடி, மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் தக்க ஆலோசனைகளை வழங்கினார்.

தஞ்சாவூர்

பாராட்டுச் சான்றிதழ்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மகளிர் திட்ட, திட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போது 2009-10ஆம் ஆண்டில் வங்கிகள் மூலம் ரூ. 92 கோடிக்கு மேல் இணைப்பு தொகை ஏற்படுத்தியமைக்கு பாராட்டுகளைத் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. சு. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் அனைத்து தொண்டு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும் நடப்பாண்டில் வங்கிகள் மூலம் அதிக குழுக்களுக்கு கடன் இணைப்புத் தொகை பெற்றுத் தருவதில் தனி கவனம் செலுத்தி, இலக்கீட்டினை முழுமையான அளவில் எய்திட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கினார். ■

தூத்துக்குடி

விற்பனைக் கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் அரசு மானியத்துடன் கூடிய பொருளாதாரக் கடனுதவி வழங்கி, தொழில் வளம் பெருக்கி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பு பல்வேறு நிலைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகிறது.

முக்கியமான விழாக்கள் நடைபெறும் தினங்களில் மக்கள் அதிகம் கூடும் போது, பொருட்கள் விற்பனையாவதற்கு அதிகமான வாய்ப்பு உள்ளதைக் கருத்தில் கொண்டு திருவிழா நடைபெறும் நாட்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி சிவன் கோவில் அருகில் உள்ள நகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பெ. கீதா ஜீவன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சியின் மேயர் திருமதி. கஸ்தூரி தங்கம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. வீரணன், மகளிர் திட்ட அலுவலர் திரு. ஆ. செல்வம், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் 30 அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. அதில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமான பல்வேறு பொருட்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான பொதுமக்கள் இக்கண்காட்சியினைக் கண்டு களித்து தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கிச் சென்றனர். ■

திருப்பூர்

மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி

திருப்பூர் மாவட்டத்தில் சாயக் கழிவு நீர் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மத்திய மாநில அரசுகளின் மானியம் வழங்கும் விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியினை வழங்கி சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள், மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் திருமதி. பனபாக லட்சுமி அவர்கள், மாண்புமிகு தமிழக பிற்பட்டோர் நலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு. K. K. S. S. R. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வெள்ளக்கோவில் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், கைத்தறி துணி நூல் மற்றும் கதர்துறை முதன்மை செயலாளர் திரு. R. ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மத்திய ஜவுளித்துறை செயலாளர் திருமதி, ரீட்டா மேனன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மத்திய மாநில அரசுகளின் மானியம் வழங்கும் விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியினை வழங்கி சிறப்பித்தார்கள்.

சமூகச் சீர்திருத்தவாதி

திருமதி. ருக்மணி லட்சுமிபதி

வரலாறு படைத்த பெண்களுள் திருமதி. ருக்மணி லட்சுமிபதியும் ஒருவர். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமைக்குரியவர். சென்னை சட்டசபைக்குத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்ணும் ஆவார். சென்னை மாகாணத்தின் முதல் பெண் அமைச்சர். வேலூர் சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்கெனத் தனிப்பிரிவு தொடங்கத் தூண்டுகோலாக இருந்தவர்.

விடுதலைப் போராட்ட வீராங்கனை. சமூகச் சீர்திருத்தவாதி. மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். தீண்டாமை எதிர்ப்பியக்கத்தின் முன்னோடி. சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர். இப்படி பல பெருமைகளைப் பெற்றவர் திருமதி. ருக்மணி லட்சுமிபதி அவர்கள்.

திருமதி. ருக்மணி அம்மையார், 1893ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் சென்னையில் சீனிவாச ராவ் என்பவருக்கும் சூடாமணி அம்மையாருக்கும் மகவாகப் பிறந்தார். சென்னை எழும்பூர் பிரசிடென்சி பள்ளியில் படித்த அவர், பின்பு நுங்கம்பாக்கம் கிறித்துவக் கல்லூரியில் இண்டர்மீடியட் படித்தார். மாநிலக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார்.

1911 டிசம்பரில், தம் 18ஆவது வயதில் ஆச்சந்த லட்சுமிபதி என்ற புகழ் பெற்ற மருத்துவரைக் காதலித்து மணம் முடித்தார். இது ஒரு புரட்சிகரமான கலப்புத் திருமணமாகும். கணவர் தேசியவாதியாக இருந்ததால், அவருடன் இணைந்து ருக்மணியும் தேச சேவையில் ஈடுபடலானார். குடும்ப வாழ்விலும் சிறப்பாக ஈடுபட்டு வந்தார்.

சில வருடங்கள் குழந்தை பேறு, குழந்தை வளர்ப்பு என்று காலம் ஓடின. பிறந்த குழந்தைகளில் மூவர் நோய்வாய்ப்பட்டு இறந்தனர். மற்ற மூவரையும் வளர்த்து ஆளாக்கினார். அப்பொழுது தொடங்கி மெதுமெதுவாகச் சமூக வாழ்வில் ஈடுபடலானார்.

> விடுதலைப் போராட்ட வீராங்கனை. சமூகச் சீர்திருத்தவாதி. மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். தீண்டாமை எதிர்ப்பியக்கத்தின் முன்னோடி. சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர். இப்படி பல பெருமைகளையும் பரிமாணங்களையும் ஒரு சேரக் கொண்டவர் திருமதி ருக்மணி லட்சுமிபதி.

திருமதி. ருக்மணி லட்சுமிபதி அவர்கள், 'பாரத் மகா மண்டல்' என்ற சமூக சேவை அமைப்பின் கிளையை சென்னையில் துவக்கி, பெண்களை ஒருங்கிணைத்து சமூகப் பணியில் ஈடுபடுத்தினார். அவ்வமைப்பின் செயலாளராகப் பணியாற்றிய அவர், 'இளைஞர் அமைப்பு' என்ற அமைப்பையும் ஏற்படுத்தி, அதன் மூலம் மதுவை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். இவ்வமைப்பின் மூலம் தேசிய அரசியலில் இளைஞர்களையும், மாணவர்களையும் ஈடுபடத் தூண்டினார். 1924 இல், இந்திய தேசிய காங்கிரஸில் உறுப்பினரானார். அந்நியத் துணி எதிர்ப்பில் ஈடுபட்ட அவர், திருவல்லிக்கேணியில் கதர் துணி விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்கினார். தான் மட்டுமன்றி, தன் குடும்பத்தினரையும் கதர் அணியச் செய்தார்.

அதே ஆண்டு ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்ட அம்மையார் அங்குள்ள கல்வி முறையைக் கண்டு வந்தார். அதன்பின்பு இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் ஆங்கிலேயரின் கல்வி முறையை மாற்றி, தேசியக் கல்வி முறையை உருவாக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். மேலும், கல்வி முறையில் இராணுவப் பயிற்சியும் தரப்படுதல் வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

927 இல் சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில், கட்சியின் மாதர் பிரிவின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1929இல், லாகூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில், 'இந்தியப் பெண்கள் சங்க'த்தின் பிரதிநிதியாகப் பங்கேற்று, அரசியலில்

தமிழ்நாட்டில் 1930, ஏப்ரல் 13ஆம் நாள் திரு. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார் திருமதி. ருக்மணி லட்சுமிபதி. அப்பொழுது அவருடைய 1 1/2 வயது மகன் ராமாராவின் உடல் நலம் குன்றியது. அந்தத் தகவலைக் கேட்டும், கணவர் பார்த்துக் கொள்வார் என்று மனதைத் தேற்றிக்

பெண்களுக்குச் சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து, அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார். அதே ஆண்டு, பாரீஸில் நடைபெற்ற 10ஆவது உலகப் பெண்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டு 'பெண்கள் முன்னேற்றம்' குறித்து மிகச் சிறப்பாக சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.

கொண்டு, போராட்ட நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார். அவரை, தலைவர்கள் வற்புறுத்தி சென்னைக்கு அனுப்பினர்.

குழந்தையின் உடல் நலம் சிறிது தேறியவுடன் மீண்டும் உப்புச் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டார். உப்புக் குவியலின் மேல் படுத்துக் கொண்டு, அறப்போர் புரிந்த அம்மையார் கைது செய்யப்பட்டு, ஒரு வருடம் சிறை தண்டனை பெற்றார். சத்தியாகிரகப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை தண்டனை பெற்ற முதல் பெண் இவரே.

அம்மையார் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். அதுவரை, சிறையில் பெண் அரசியல் கைதிகளுக்கெனத் தனிப்பிரிவு இல்லாமலிருந்தது. இவருக்காக வேலூர் சிறையில் முதன் முதலில் பெண் அரசியல் கைதிகளுக்கெனத் தனிப்பிரிவு தொடங்கப்பட்டது. (தொடரும்)

பணியிடைப் பயிற்சி

சென்னை, எழும்பூரில் சமூக நல வாரிய ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற குடும்ப நல ஆலோசனை மைய ஆலோசகருக்கான பணியிடைப் பயிற்சியினை, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் தலைவி கவிஞர் திருமதி. சல்மா அவர்களின் தலைமையில், சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு. டி. ராஜேந்திரன், இ.கா.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்திய மாதர் சங்கத்தின் தலைவி பத்மபூஷன் திருமதி. சரோஜினி வரதப்பன், 4M அறக் கட்டளையினைச் சேர்ந்த திரு. அப்துல் காதர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பணியமர்வு ஆணைகள்

கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் சார்பில் இளைஞர் தொழிற்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் ஊரக பீ.பி.ஓ. பயிற்சி முடித்தவர்களுக்கு பணியமர்வு ஆணைகளை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இவ்விழாவில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சரஸ்வதி கணேசன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

அல்சர் எனப்படும்

குடல் புண் நோய்

இரைப்பையும், சிறு குடலும் சேர்ந்த செரிமான பகுதியின் உட்புறத்தில் மேற்பகுதியில் ஏற்படும் புண்ணை குடல் புண் என்கிறோம். செரிமானப் பகுதிகள் எப்போதும் ஈரமாகவும், மூடப்படாமலும் இருக்கின்றன. இதனால் இரைப்பையில் செரிமானத்திற்கு தேவைப்படும் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. குடல் புண் வந்துள்ள சிலருக்கு இந்த அமிலம் அதிகமாகச் சுரப்பதும் உண்டு. இதை அமிலக் குடல் புண் நோய் என்றும் அழைக்கிறோம்.

காரணமின்றி பற்களைக் கடித்தல், உடலைத் துளைப்பது போன்ற வலி அல்லது எரிச்சலோடு கூடிய வலி, மார்பு எலும்புக் கூட்டிற்கு கீழே வயிற்றுப் பகுதியில் ஒன்றுமே இல்லை என்ற மாயத் தோற்றம் போன்றவை இருந்தால் குடல் புண் நோய் ஏற்பட்டு இருப்பதாகக் கொள்ளலாம். இந்தப் பகுதியில் ஏற்படும் அசௌகரியங்கள் சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குள்ளாகவோ அல்லது வெறும் வயிற்றிலோ ஏற்படுகின்றன. இதை உணவு சாப்பிடுவதன் மூலமாகவோ அல்லது அமிலத்தை நடுநிலைப்படுத்தும் மருந்துகளை உட்கொள்வதின் மூலமாகவோ நிவர்த்தி செய்யலாம்.

சில நேரங்களில் வாந்தியினால் வலி குறைகிறது. அபூர்வமாக வலி உள்ள வயிற்றுப் பகுதிக்கு நேர் பின்பக்கமாக வலி ஏற்படும். இவ்வலியானது காலை சிற்றுண்டிக்கு முன்பு வருவதே இல்லை. இரவு 12 – 2 மணி அளவில் அதிகமாகக் காணப்படுகிறது. சில நேரங்களில் அமில நீரானது வாந்தியாவதும் உண்டு. குடல் புண் வலி தனியாக வருவதே இல்லை.

ஒருநபர் எந்த அளவுக்கு அடிக்கடி சாப்பிடுகிறார் என்பதைப் பொறுத்து இவ்வலி ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவைக் கூட வரும். சில நாட்களுக்கோ அல்லது மாதங் களுக்கோ விட்டு விட்டு வருவதும், தொடர்ந்து இருப்பதும் உண்டு. பிறகு இவ்வலி மறைந்து, சில வாரங்களுக்கோ அல்லது சில மாதங்களுக்கோ தோன்றாமலும் இருக்கலாம். சிலருக்கு இவ்வலி குறிப்பிட்ட இடைவெளிவிட்டு தோன்றி, பல வருடங்களுக்கு நீடிக்கலாம். அப்படி இருப்பின், அவருக்கு நாள்பட்ட குடல் புண் இருப்பதாகக் கருதலாம்.

வலி இருக்கும் காலத்தில் மார்பு எலும்புக் கூட்டுக்கு பின்னால் எரிவது போன்ற உணர்ச்சியும் உடன் ஏற்படும். இதையே நெஞ்செரிச்சல் என்கிறோம்.

அடிக்கடி வரக் கூடிய பசி உணர்வை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனென்றால் இது குடல் புண்ணின் விளைவாகக் கூட இருக்கலாம்.

குடல் புண் தோன்றுவதற்குரிய காரணங்கள் இதுவரை தெளிவாக அறியப்படவில்லை. இருப்பினும் புகைப் பிடித்தல், புகையிலையைச் சுவைத்தல், மது அருந்துதல் மற்றும் சில மருந்துகளை சாப்பிடுவது போன்றவை குடல் புண் வருவதற்கு வழி வகுக்கின்றன.

குடல் புண் நோய்க்கு தக்க மருத்துவ சிசிச்சை மேற்கொள்ளாவிடில், குடலில் ரத்தக் கசிவு ஏற்படும். சில சமயங்களில் கருஞ்சிவப்பு நிறத்தில் ரத்த வாந்தியும் ஏற்படும். இந்த நிலை மிகவும் அபாயகர மானதாகும். இரைப்பையில் சுரக்கும் நீர்களும், அமிலமும் குடல் புண்ணின் மேல் அடிக்கடி படுவதால், இரைப்பையில் துவாரம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதனால் வயிற்று அறைகள் நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்டு வீக்கம் உருவாகி சாப்பிடும் உணவு வயிற்றுக்குச் செல்ல முடியாதவாறு தடைகள் தோன்றி, வாந்தி ஏற்படலாம்.

இந்த நிலையில் உடனடியாக அறுவை சிகிச்சை மூலமே குணப்படுத்த முடியும். ஆகவே குடற்புண் நோய் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.



வாய்வுக் கோளாறால் ஏற்படும் குடல் புண், சிறு குடலில் ஏற்படும் குடல் புண் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

குடல் புண் உள்ளவர்களுக்கு உரிய உணவுகள்

1. குறிப்பிட்ட நேரத்தில் உண்ணும் பழக்கம்
2. காபி, மது, காற்று அடைக்கப்பட்ட பானங்களைத் தவிர்க்க வேண்டும்
3. டீ தடை செய்யப்பட்ட பானம் அல்ல. எனினும் பால் கலக்காத டீயை சாப்பிடக் கூடாது. தினமும் சாப்பிடும் டீயின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்
4. வயிற்றுக்கு ஒத்துவராத உணவு வகைகளை ஒதுக்கிடவிட வேண்டும்
5. மிகவும் சூடான உணவுகளை சாப்பிடக் கூடாது
6. குளிரூட்டப்பட்ட உணவுகள் முக்கியமாக தயிர் முதலியவைகளை சாப்பிடலாம்
7. பச்சையான, நன்கு பக்குவம் அடையாத வாழைப்பழங்கள் குடல் புண்களை ஆற்றும் குணத்தைப் பெற்றிருக்கின்றன
8. பச்சைத் தண்ணீரை அதிகம் குடிக்க வேண்டும். வலியோ அல்லது அசௌகரியங்களே ஏற்படலாம் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் ஒரு டம்ளர் நீர் குடித்தால் அமிலமானது நீர்த்துப் போய் விடுகிறது.
9. பால் சாப்பிடுவதை தவிர்க்கவும். ■

குடல் புண்ணால் பாதிக்கப்பட்டவர்கள் செய்யக் கூடாதவை

1. புகை பிடிக்கக் கூடாது
2. மது, காபி பானங்கள் குடிக்கக் கூடாது
3. வயிற்று வலியை அதிகப்படுத்தக் கூடிய உணவு வகைகளை உண்ணக் கூடாது
4. அதிகமாக சாப்பிடக் கூடாது
5. பின்–இரவு விருந்துகளை தவிர்க்க வேண்டும்
6. சாப்பிட வேண்டிய உணவுகளைத் தவிர்க்கக் கூடாது
7. சாப்பிட்டவுடன் முன்பக்கமாகச் சாய்வதோ, வளைவதோ கூடாது. அப்படி செய்தால் சாப்பிட்ட உணவு தொண்டைக் குழிக்குள் வந்து சேரும்.
8. இரவில் அதிக நேரம் விழித்திருக்கக் கூடாது
9. மனநிலையை தடுமாறக் விடுதல், அவசரப்படுதல், கவலைப்படுதல் போன்றவை கூடாது
10. மருத்துவரின் ஆலோசனைகளை அலட்சியப்படுத்துதல் கூடாது

குடற்புண்ணால் பாதிக்கப்பட்டவர்கள் செய்யக் கூடியவை

1. குறைந்த அளவில் அடிக்கடி சாப்பிட வேண்டும்
2. தண்ணீர் அதிகமாகக் குடிக்க வேண்டும்
3. அதிக வாழைப்பழங்கள் சாப்பிட வேண்டும்
4. தயிரிலிருந்து தயாரிக்கப்பட்ட சுவையூட்டிய லஸ்ஸி போன்ற பானங்களை அதிகம் சாப்பிட வேண்டும்
5. மருத்துவர் கூறிய மருத்துவ சிகிச்சைகளை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும்
6. இடுப்பில் உள்ள பெல்ட் மிகவும் தளர்ச்சியாக இருக்க வேண்டும்
7. இறுக்கமான ஆடைகளை அணியக் கூடாது
8. மருத்துவரின் ஆலோசனைப்படி படுக்கையின் தலைப்பாகத்தை சிறிது உயர்த்திக் கொள்ளலாம்
9. யோகாசனம், தியானம் முதலியவற்றைப் பயில வேண்டும்
10. எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்
11. முறையாக இறுக்கம் இல்லாத வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும்
12. சுகாதாரத்தைப் பின்பற்றி குடல் புண் வருவதைத் தவிர்க்க வேண்டும்

சிகிச்சை முறைகள்

அநேக மருத்துவர்கள் பூரண ஓய்வையும், அதிக மான தூக்கத்தையும் சிபாரிசு செய்கிறார்கள். தீவிரமான வேலைகளில் இருந்து இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஓய்வு எடுத்தாலே போதுமானது. எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் கவலைகள் குடல் புண்ணை அதிகப்படுத்தும். புகை பிடித்தல், புகையிலையைச் சுவைத்தல், மது போன்றவைகளைக் கைவிட வேண்டும். அமிலத்தை நடுநிலையாக்கும் மருந்துகளை அடிக்கடி சாப்பிட வேண்டும். இருப்பினும் எந்த மருந்தாக இருந்தாலும் மருத்துவரின் ஆலோசனைப்படிதான் சாப்பிட வேண்டும். ■

வளர்க வணிகம்

மொத்தமாய் உழைத்து
மெத்தவே உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின்

பனை ஓலை பொருட்கள்
அன்னை மாயா சுய உதவிக் குழு,
நாகப்பட்டினம் மாவட்டம்.
செல்பேசி: 96263 83955

கால் மிதியடிகள்
குமரகிரிப்பேட்டை நெசவுத்
தொழிலாளர் கூட்டமைப்பு,
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி: 97908 72013

பருத்தி புடவைகள்
சப்தகன்னி சுய உதவிக் குழு,
மதுரை மாவட்டம்.
செல்பேசி: 93624 16104

அழகிய மண் பொம்மைகள்
செல்வ விநாயகர் சுய உதவிக் குழு,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்பேசி: 97902 85758

அழகிய கலைப் பொருட்கள்
கண்ணாத்தாள் சுய உதவிக் குழு,
சிவகங்கை மாவட்டம்.
செல்பேசி: 94423 79809

மரப் பொருட்கள்
சோழா சுய உதவிக் குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
செல்பேசி: 93442 99129

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின்

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி நிறைவு விழா

மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தால் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழிற்திறன், உற்பத்தி செய்யும் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்தம் ஆற்றலை வெளியுலகிற்கு உணர்த்திடவும், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி உதவிட ஒரு வாய்ப்பளிக்கவும் இந்த விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இவ்வாண்டு இக்கண்காட்சி சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ கற்பகாம்பாள் திருமண மண்டபம், வேலூர் லட்சுமி அம்மாள் திருமண மண்டபம் மற்றும் சென்னை அண்ணா நகர் மேற்கில் அமைந்துள்ள தந்தை பெரியார் சமுதாயக் கூடம் ஆகிய இடங்களில் 08.10.2010 முதல் 31.10.2010 வரை நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் இக்கண்காட்சிகளை துவக்கி வைத்தார்கள்.

இக்கண்காட்சிகளில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான பொதுமக்கள் இக்கண்காட்சிக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சென்றனர்.

இக்கண்காட்சிகளின் நிறைவு விழா 31.10.2010 அன்று சென்னை அண்ணா நகர் மேற்கில் அமைந்துள்ள தந்தை பெரியார் சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு கண்காட்சியில் பங்கு கொண்டு அரங்குகள் அமைத்து சிறப்பாக செயல்பட்ட அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்கள். ■

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமானதாகவும், கலைநயம் மிக்கதாகவும், விலை குறைவாகவும், சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையிலும் இருப்பதால் மக்களிடையே பிரபலமடைந்து வருகின்றன.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்

ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு பொருளாதார வகையில் உதவிடும் வண்ணம் 'அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற திருமண நிதியுதவித் திட்டம்' என்ற பெயரில் தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

வழங்கப்படும் நிதியுதவி

ரூபாய் 20,000/- (கேட்பு வரைவோலை அல்லது காசோலையாக வழங்கப்படும்)

பயன் பெறுபவர்

தாய் தந்தை அற்ற ஆதரவற்ற பெண்கள்

தகுதி

மணமகளின் குறைந்தபட்ச வயது 18 முதல் 30 வயது வரை இருக்க வேண்டும். கல்வித் தகுதி தேவையில்லை. ஆண்டு வருமானம் ரூ. 24,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன்

விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றிதழ்கள்

1) விண்ணப்பதாரர் தாய், தந்தை இருவரும் இல்லாததன் காரணமாக முழுமையான ஆதரவற்றவர் என்ற சான்றிதழ்
2) விண்ணப்பதாரரின் வருமானச் சான்றிதழ் / பாதுகாவலரின் வருமானச் சான்றிதழ்
3) விண்ணப்பதாரரின் வயதுச் சான்றிதழ்

விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு

விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்கள்

அணுக வேண்டிய அலுவலர்

1) மாவட்ட சமூக நல அலுவலர்
2) சமூக நல விரிவாக்க அலுவலர்

குறைபாடுகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர்

மாவட்டங்களில் - மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர்

மாநில அளவில் - சமூக நல ஆணையர், சென்னை - 5. தொலைபேசி எண் 044-28545728

கெருகம்பாக்கம்

நிலையான வருமானத்தை நோக்கிய பயணத்தில் கெருகை ஆயத்த ஆடை கூட்டமைப்பு

மிகவும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் ஒன்றாக இணைந்து 'கெருகை கார்மெண்ட்ஸ் சோசியல் வெல்பர் அசோசியேஷன்' என்ற தொழில் கூட்டமைப்பை ஆரம்பித்தனர். இதில் 27 பெண்கள் சிறப்பு பயிற்சி பெற்றனர்.

குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சியில் உள்ள மகளிர் தங்களது அன்றாட வருமானத்திற்காக நகர பகுதியில் உள்ள பெரிய ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனங்களில் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு சென்று வந்தனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஆயத்த ஆடைகள் தயாரித்துக் கொடுக்கும் வகையில் ஏழை, மிகவும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் ஒன்றாக இணைந்து 'கெருகை கார்மெண்ட்ஸ் சோசியல் வெல்பர் அசோசியேஷன்' என்ற தொழில் கூட்டமைப்பை ஆரம்பித்தனர். இதில் 27 பெண்கள் சிறப்பு பயிற்சி பெற்றனர்.

ஒரு மாத சிறப்பு பயிற்சிக்கு பின் 20 தையல் இயந்திரம் வாங்கப்பட்டு, ஆயத்த ஆடைகள் தயாரித்துக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் பெரிய நிறுவனங்களிடம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயத்த ஆடைகள் தைத்துக் கொடுத்து சேவை கட்டணம் பெறுவதன் மூலம் 27 குடும்பங்களில் நிலையான வருமானத்தை நோக்கிய பயணம் தொடர்கிறது. ■

அனைவருக்கும் உணவு உறுதி செய்யும் கூட்டமைப்பு

1126 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நியாய விலை கடைகளின் மூலம் 10,940 கிலோ அரிசியை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழக அரசின் மிக உன்னதமான திட்டமான 'ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்' ஏழை மக்களின் பசியைப் போக்கி வருகிறது. அதே நேரத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்கு மேலும் தேவைப்படும் அரிசியை வெளிச்சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலையில் உள்ளனர்.

மாமண்டூர் ஊராட்சியில் 1126 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நியாய விலை கடைகளின் மூலம் 10,940 கிலோ அரிசியை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். மீதத் தேவையான 21,880 கிலோ அரிசியினை ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்பு மூலம் தரமான அரிசியை நியாயமான விலையில் மாதத்தின் முதல் வாரத்தில் கடனாக வழங்கிடவும், அதற்கான தொகையை சுய உதவிக் குழுக்களின் மூலமாக கூட்டமைப்பின் மூலம் அதே மாதத்திற்குள் பெற்றுக் கொண்டு தனது சேவையை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

"மக்களின் முதல் தேவையான உணவு தேவையை கூட்டமைப்பே நிறைவு செய்கிறது". ■

வாழ்க்கைக்கு வெளிச்சம் காட்டும் 'காஞ்சி அகல்'

காஞ்சி அகல் ஒத்த தொழில் குழுவானது மதுராந்தகம் ஒன்றியம், சிதண்டி கிராமத்தில் உள்ள ஏழை மற்றும் மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 15 இலக்கு மக்களைக் கொண்டு துவங்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சட்டியும் பானையும் மட்டுமே செய்து வந்த இவர்களால் தற்போது அகல் விளக்கு போன்ற பூஜை பொருட்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுதைய நவீன உலகில் மண்பாத்திரங்களின் பயன்பாடுகள் குறைந்த நிலையில், இவர்களது வாழ்வாதாரம் குறைவு பெற்றதை நாம் அனைவரும் அறிவோம். இந்த நிலையில் ரூ. 40 முதல் ரூ. 50 வரை தினக்கூலி பெற்று வந்த இவர்கள், மண்பாண்ட தொழிலில் புதிய யுத்திகளை ஏற்றுக் கொண்டதால் தற்போது ஒரு நாளைக்கு ரூ. 150/– வரை வருமானம் ஈட்டுகின்றனர்.

அகல் விளக்கு பிறர் இல்லங்களில் ஒளி வீசுவதைப் போல இதை தயாரித்து விற்பனை செய்யும் இக்குழுவினர் வாழ்வாதாரத்திலும் ஒளி விளக்காக சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றது. ■

பால் விற்பனையில் சூரை மகளிர் பால் உற்பத்தியாளர் சேவை குழு

படாளம் பகுதிக்கு உட்பட்ட சூரை ஊராட்சியில் கறவை மாடு வளர்த்தல் தொழில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் ஊக்கப்படுத்தப்பட்டது. வறுமை ஒழிப்பு சங்கம் பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு, வங்கி பெருங்கடன் போன்றவை மூலம் கறவை மாடு வாங்கி மகளிர் பால் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் உற்பத்தி செய்யும் பாலை தனி நபருக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்று வந்தனர். இவர்கள் ஒரு தொழில் குழுவாக ஒருங்கிணைக்கப்பட்டு, 'சூரை மகளிர் பால் உற்பத்தியாளர் சேவை குழு' என்ற அமைப்பை ஏற்படுத்தி மொத்த பால் கொள்முதல் நிறுவனத்துடன் இணைப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 11 ஆகஸ்ட் 2010 அன்று வாழ்வாதார உதவி திட்ட மேலாளர் அ. நேசமணி முதல் கொள்முதலை பெற்று இக்குழுவினை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. வனிதா கலந்து கொண்டு குழு அமைக்கப்பட்டதன் நோக்கத்தையும், இது நீடித்த நிலைத்த தன்மைக்கு நேராக வளரவும் ஆலோசனைகளை வழங்கினார்.

1 லிட்டருக்கு ரூ. 1 மட்டுமே சேவை கட்டணமாக குழு உறுப்பினர்களின் வருங்கால வைப்பு நிதியாக சேமிக்கவும் வழிவகை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக உற்பத்தியாளர் அதிக விலை பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. ■

> **வறுமை** ஒழிப்பு சங்கம் பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு, வங்கி பெருங்கடன் போன்றவை மூலம் கறவை மாடு வாங்கி மகளிர் பால் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

விருதுகள்

2009–2010ஆம் ஆண்டில் உத்திரமேரூர் ஒன்றியத்திலேயே சிறந்த மகளிர் சுய உதவிக் குழுவுக்கான மணிமேகலை விருது கருவேப்பம்பூண்டி ஊராட்சியை சேர்ந்த அன்னை இந்திராகாந்தி மகளிர் சுய உதவிக் குழுவுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக பெற்றுத் தரப்பட்டது. ■

நாங்களும் பயன் மிக்கவர்களே...

பொதுவாக திறன் மிக்கவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு முகாமில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதற்கு உள்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் முன் வரும் நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் மூலம் ஒரு புதிய முயற்சியில் 434 பேருக்கு வேலை கிடைத்துள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் காஞ்சிபுரம் மாவட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் சமீபத்தில் செங்கல்பட்டு அலிசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் பன்னாட்டு நிறுவனங்கள் உட்பட 16 வேலை அளிக்கும் அமைப்புகள் கலந்து கொண்டன. இந்த சிறப்பு வேலைவாய்ப்பு முகாமினை அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். உதவி திட்ட மேலாளர்கள் திரு. முருகேசன், திருமதி. பத்மா மணி, திரு. ராஜேந்திரன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருந்தனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் இம்மாவட்டத்திலிருந்து 873 மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டதில் 434 மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. ■

> **உள்நாடு** மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் முன் வரும் நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் மூலம் ஒரு புதிய முயற்சியில் 434 பேருக்கு வேலை கிடைத்துள்ளது.

ஊராட்சி ஊக்க நிதி குறித்து

ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்து கொண்ட ஒரு நாள் கலந்தாய்வுக் கூட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர்கள் பங்கு குறித்து விளக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த 59 ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு ஊராட்சி ஊக்க நிதி குறித்த கலந்தாய்வு நடைபெற்றது. கூடுதல் ஆட்சியர் திரு. ஹனீஷ் சாப்ரா, இ.ஆ.ப., அவர்கள் கலந்தாய்வினைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாவட்ட திட்ட மேலாளர் அவர்கள் தலைமை தாங்கினார். உதவித் திட்ட மேலாளர் திரு. சுபான் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்ற தலைவர்கள், பழமாத்தூர் திரு. மணியன் மற்றும் விராலூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு. கதிர்வேல் ஆகிய இருவரும் வாழ்ந்து காட்டுவோம் மூலம் தாங்கள் தங்கள் ஊராட்சிக்கு பெற்ற நலன்கள் குறித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஊராட்சி மன்ற தலைவர்களை ஊக்குவிக்கும் வகையில் அச்சிறுபாக்கம் ஒன்றிய பகுதி அணித் தலைவர்கள் பிருந்தா, ரமேஷ்குமார், சுகுமார், ராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர்கள் பங்கு குறித்து விளக்கப்பட்டது. இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் ஊராட்சி ஊக்க நிதி பெற தகுதிகள் குறித்து கூடுதல் ஆட்சியர் விளக்கி கூறினார். இந்த விளக்கக் கூட்டத்தில் உதவித் திட்ட மேலாளர் திரு. கோகுலன் அவர்கள் அனைத்து ஊராட்சி தலைவர்களுக்கும் நன்றியுரை கூற நிகழ்ச்சி நிறைவு பெற்றது. ■

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த 59 ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு ஊராட்சி ஊக்க நிதி குறித்த கலந்தாய்வு நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மக்கள் கற்றல் மையத்திற்கு (மகமை) வருகை தந்தார். வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாநில வல்லுநர்கள் ஆகியோருடன் முதன்மைச் செயலாளர் அவர்கள் சமூக வல்லுநர்களின் நிர்வாகத் தன்மையை பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினர். மக்கள் கற்றல் மையம் (மகமை) மேலும் சிறப்பாக செயல்பட தேவையான ஆலோசனைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள் வழங்கினார்கள். ■

அனைவரும் உணவருந்த 'அட்சய போஜனம்' வாங்க...

காஞ்சிபுரம் மாவட்டம் மாடம்பாக்கம் கிராமத்தைச் சுற்றி சிறு சிறு தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு வெளியூரைச் சேர்ந்த பணியாளர்கள் தங்கி பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு அந்தப் பகுதியில் குறைந்த செலவில் தரமான உணவு கிடைக்க வாய்ப்பில்லாமல் இருந்தது. எனவே அந்தப் பணியாளர்களுக்கு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உணவு தயாரித்துக் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுவினர் திருச்சி துவாக்குடியில் செயல்பட்டு வரும் மாநில உணவக மேலாண்மை நிலையத்திற்கு சிறப்பு பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பயிற்சி பெற்ற பிறகு சுய உதவிக் குழுக்கள் கடன் உதவி பெற்று உணவகத் தொழிலை மேற்கொண்டனர்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பயிற்சிகளுக்கும், உணவு தயாரித்துக் கொடுத்து சிறிய அளவில் வருவாய் பெற்று வந்தனர். இந்த உறுப்பினர்களில் கைதேர்ந்த 10 நபர்களை தேர்ந்தெடுத்து 'அட்சய போஜனம் சமையல் தொழில் குழு' வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தொடர் வழிகாட்டுதலின்படி இந்தக் குழுவிற்கு மறைமலை நகரில் அமைந்துள்ள அரசு மாநில ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சி மையத்தில் உணவகம் நடத்த வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அட்சய போஜனம் மகளிர் சுய உதவிக் குழுவினர் நிலையான மாத வருமானம் ஈட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ■

மாணவ - மாணவியருக்கான

கல்வி ஊக்கத் தொகை

குழுவாக சேர்ந்ததன் மூலமாக, தங்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள தங்கள் வயதையொத்தவர்களே கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 25.10.2010 அன்று வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினுடைய மக்கள் கற்றல் மையமும் (மகமை) இந்திய ஆயுள் காப்பீட்டு கழகமும் (LIC) இணைந்து மாணவ-மாணவியருக்கு கல்வி உதவித் தொகை மற்றும் புத்தகங்கள், நோட்டுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் மதுராந்தகம் ஒன்றியத்தை 138 மாணவ-மாணவியருக்கு ரூ. 86,500/-, ஐந்து நபர்களுக்கு ரூ. 1,50,000/- இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் LICயின் முதுநிலை கோட்ட மேலாளர் திரு. கண்ணன், மண்டல மேலாளர் திரு. சுவாமிநாதன், முதுநிலை மேலாளர் திரு. குமார், கோட்ட மேலாளர் திரு. சக்கரவர்த்தி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட மேலாளர் பா. மணிராஜ் அவர்களும் மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. தில்லைநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு, மாணவ-மாணவியருக்கு வழங்கி சிறப்பித்தார்கள். மேலும் அணித் தலைவர்கள் எல்லப்பன், இன்பநாதன், தணிகைவேல், பெரியநாயகம் ஏற்பாடுகள் செய்திருந்தனர். ■

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd., 100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (57,500 copies circulated) an printed by C. JABAMANI. CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

- பாதுகாப்பற்ற உடலுறவு
- சுத்திகரிக்கப்படாத ஊசி
- பரிசோதிக்கப்படாத இரத்தம்
- கர்ப்பிணி தாயிடமிருந்து பிறக்கும் குழந்தைக்கு

இப்படி 4 வழிகளில் தான் எச்ஐவி உள்ள
ஒரு நபரிடமிருந்து இன்னொருத்தருக்கு
எச்ஐவி பரவ வாய்ப்பிருக்கு.
ஆக எப்பவும் கவனமாகவும்,
பாதுகாப்பாகவும் நடந்துக்கங்க.
மத்தவங்களுக்கும் எடுத்து சொல்லுங்க.
அப்பதான்...

வாழ்வை கொண்டாட முடியும்!!!

தொடறதால, உடைகள், கழிப்பிடம், பாத்திரங்கள் பகிர்ந்துகிறதால, சேர்ந்து பழகரதால, கூட வேலை செய்யறதால, விளையாடறதால எச்ஐவி கட்டாயம் பரவாது.

**அப்புறம் என்ன
எச்ஐவியோட வாழ்பவரை
சக மனிதரா நடத்துவோம்!**

இதை மத்தவங்களுக்கு எடுத்து சொல்லுவோம்!!!
சமுத்துவ சமுதாயம் உருவாக
இந்த இளைய சமுதாயம் பாடுபடணும்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2282/2004
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11